ஸ்ரீ

# தேவிகாலோத்தர ஞாநசார விசார படலம்

பிறவிகளில் (தேகங்களில்) சிறந்தது மானிடப் பிறவி; நோன்புகளில் சிறந்தது கொல்லாமை (பிற ஜீவர்களுக்கு துன்பம் செய்யாதிருத்தல்); தெய்வங்களில் சிறந்தது கண்ணுதற் கடவுளாகிய சிவ பெருமான்; தெரிந்து அறிய வேண்டிய நூல்களில் சிறந்தது தேவிகாலோத்தரமே.

பரமசிவன் தனது திருவாக்கால், பார்வதி தேவியின் செவிகளில் புகட்டியருளிய, இந்த தேவிகாலோத்தரமென்ற ஞான மார்க்கத்தில் நடந்து, அதில் தேர்ந்தவர்களின் மகத்தான விளைவால் பிரகாசிக்கும், ஆனந்தமய அம்ருதமான அருள்நிறைந்த அத்துவித மௌனமாகிய, சர்வசாட்சிரூபமான யானைமுகனை தியானிப்போம்.

ஸ்ரீ

# தேவிகாலோத்தர – ஞாநசார விசார படலம்

(வேறு)

அரிய வாக்கையின் மானிட வாக்கையே யாக்கை
விரியு நோன்பினி லுயிர்கொலா விரதமே விரதங்
கருதிற் றெய்வதங் கண்ணுதற் றெய்வமே தெய்வந்
தெரியிற் றேவிகா லோத்தரத் தேற்றமே தேற்றம்.

– கண்ணுடைய வள்ளலார்

**நூல்**

**(கலிவெண்பா)**

தேவன் றிருவாயாற் றேவி செவிபுகட்டுந்
தேவிகா லோத்தரந் தேர்ஞான — மாவிளைவா
மானந்த வானமுத மானவரு ளத்துவித
மோனக் கரியகமே முன்னம்மை — தானும்

1. ஸ்ரீ பார்வதி தேவி: "பரமேச்வரா! சகல உயிர்களும் எதனையறிந்தால் முக்தியை அடைவதற்கான வழியை காணலாகுமோ, அத்தகைய ஞானத்தையும் ஆசாரத்தையும், அறிய விருப்பமுள்ள எனக்கு, அவற்றை கருணைக்கூர்ந்து சொல்லியருள்வீராக'' என்று வேண்டினாள்.

2. அதற்கு ஞான சொரூபனான பரமேச்வரன், "மாதர்களுக்கு அரசியே! எந்தச் சாதனையை அனுஷ்டிப்பதனால், விவேகிகள், யாதொரு குற்றமற்ற, சொல்லுதற்கு அரிய முக்தியடைவார்களோ, அத்தகைய ஞானமார்க்கத்தையும் ஆசாரங்களையும், அனைவரும் ஞானமடையும் பொருட்டு, நான் உனக்கு இன்று நன்றாக சொல்லுகிறேன். கேட்பாயாக" என்று அருளினார்.

3. நல்ல முகத் தோற்றமுடைய பார்வதியே! உத்தம அதிகாரிகளுக்கு உபதேசிக்கக் கூடிய குறைவில்லாத இந்த காலோத்தர ஞானத்தினால், எவர்களுக்கு முக்திக்கு வித்தாகிய அபரோட்ச ஞானம் உள்ளத்தில் உதிக்காதோ, அப்படிப்பட்டவர்கள் வானம் போன்று விரிந்த, கணக்கிலடங்காத சாஸ்திரங்களை கற்றாலும், அவர்களுக்கு சொரூப ஞானம் உதிக்காதென்றே உணர். இது நிச்சயம்.

4. ஆகையால் சாதகனானவன் பீதியற்று, முக்தி கிடைக்குமென்ற உறுதியுடன், சந்தேகப்படாமல், இச்சையற்று, உள்ளத்தில் சிரத்தையுடையவனாய், மனதில் குழப்பம் அற்று, ஞானத்தில் உற்சாகமுடையவனாய்.

5. 'நான்' என்ற அகங்காரமும் 'எனது' என்கிற மமகாரமும் அற்று, ஜீவகாருண்ணியம் நிறைந்து, எல்லா உயிர்களுக்கும் அபயம் தந்து, முக்தியில் தீவிர இச்சையுள்ளவனாய், யோகத்தில் மனம் ஒன்றியவனாய், இத் தேவிகாலோத்தர மார்க்கமொன்றிலேயே மனம் இசைந்து நிற்பானாக.

(6-7) குளகம்

சூறைக் காற்றுக்கு சமானமான மனதை வெளிப்போக விடாது, எவனொருவன் வலித்து இழுத்துக் கட்டுப்படுத்தி, சலனமற்ற நிலையில் வைக்கிறானோ, அவனது மகிமையைக் கூறவும் இயலுமோ! அவனே சதுர்முகப் பிரம்மாவும், பரமசிவனும், மகாவிஷ்ணுவும், தேவர்களின் அதிபதியாகிய இந்திரனும், சுப்பிரமணியனும் ஆவன்.

அவனே சகல தேவர்களின் குருவாகிய பிருகஸ்பதியும், மகாயோகியும், எல்லாத் தவங்களையும் செய்து, அவைகளில் சித்திபெற்ற தபோதனனும், உலகம் போற்றும் மகா பண்டிதனும், புருஷசிரேஷ்டனும், உண்மை ஞானத்தைப் பெற்றவனும் ஆவான்.

**தேவி:-**

அனைவர்க்கு மேமுத்திக் காகவம் முத்தி
தனையுறுமார்க் கக்காட்சி தானு — மனையபர
ஞானமா சாரமே நாடுமெனக் குன்னருளால்
வானவ ரீசா வழுத்தென்ன — ஞானசிவன் *1*

**ஈசன்:-**

யாதினுன் ஞானியர்கள் யாதோர் களங்கமுமி
லோதரிய முத்திதனை யுற்றிடுவார் — மாதரசே
ஞானவா சாரங்க ளனுனக் கின்றுரைப்பன்
ஞானமுற யாவருமே நன்கிந்த — வூனமறு *2*

ஞானந்தான் யாவர்க்கு நன்முகத்தோ யிக்கால
ஞானத்தா லுள்ளி னணுகாதோ — வான
கணக்கிலாக் கோடிநூல் கற்றுலு மன்னோர்க்
குணர்வுதியா தென்றே யுணர்வாய் — துணிவீ(து) *3*

அதனுலே நிர்ப்பயனு யையமென லின்றி
யெதனிலுமே யிச்சை யிலனு — யிதயத்தி
னற்சிரத்தை யோடு நிராகுலனுய் ஞானத்தி
லுற்சாக முள்ளோனு யுற்றெனதென் — பற்றும் *4*

மமதையின் றிக்கருணை மன்னிப்பூ தங்க
டமக்கெல்லா மேயபயந் தந்து — முமுட்சுவா
யோகத்திற் றற்பரனு யோதிக்கா லோத்தரத்தி
னேகவழி நிற்க விசைந்துபுறம் — போகா *5*

அவன்றானே நான்முகனு மச்சிவனு மாலு
மவன்றேவர் கோன்குகனு மாவ — னவன்று
னகில சுரர்குருவு மாவன்மா யோகி
யகில தபோதனனு மாமே — யகிலமுணர் *6*

பண்டிதனு மாபுருடன் பாரமார்த் தப்பேறு
கொண்டவனு மன்னவனே கூறுங்கான் — மண்டியுழல்
வாயுசமஞ் சித்தம் வலித்தெவனு னிச்சலன
மாயிருத்தப் பெற்றிடு மாஞ்சித்தந் — தூயோய் *7*

(8-9) குளகம்

தூய மனமுடையவளே! காற்றைவிட அதிவேகமாக சலிக்கும் தன்மையுள்ள மனமானது, எதனால் ஸ்திரமாக நிலை நிறுத்தப்படுமோ, அதுவே முக்தியை அடைவதற்கான வழி. சத்வஸ்துவை நாடும் உபாயமுடைய சதுபாயர் சார்வதற்கான நல்ல குணமுமாகும். அதுவே நல்ல பிரக்ஞையும் ஸ்திரத் தன்மையுமாகும். பின்னும் அதுவே விவேவிகளின் ஸ்வதர்மமுமாகும்.

புண்ணிய தீர்த்த யாத்திரையும், உத்தமமான தானமும் நல்ல தபசும் அதுவேயாகும். இதில் சந்தேகமில்லை என்று அறிவாயாக.

10. ஆராயும்போது, மனமானது எவ்விதத்திலும் மனம் சிறிதேனும் சலிக்குமேயானால் அதுவே சம்சாரமாகிறது. சலிக்காமல் நிற்குமானால் அதுவே முக்தியாகும். இது மறுக்க முடியாத உண்மையாகும். ஆகையினால் விவேகி, மனதை எப்போதும் பரவஸ்துவைப் பற்றி மேலான பிரக்ஞையினால், உறுதிப்படுத்தி ஸ்திரமாக்க வேண்டும் என்பதை அறிவாயாக.

11. ஒன்றாக ஒடுங்கின அந்த ஏகாந்தரத்தில் அடைகின்ற சுகமே அழிவற்ற ஆனந்தமாகும். அங்கு எந்த கருமங்களும் இல்லை. அந்த பரவஸ்துவில் பரவித்தையை கற்றுத் தேர்ந்த எவன்தான், அதில் தோய்ந்து ரமிக்காமல் இருப்பான் நீயே சொல்.

12. அன்னியமாகவுள்ள விஷயங்களை அறியக்கூடிய ஞானம் போய், எங்கும் வியாபகமாயுள்ள, உருவமற்றதான நிர்விஷய ஞானத்தை அடைந்த சிரேஷ்டனானவன், மோக்ஷத்தை அடைய விருப்பமும் இல்லாது இருப்பினும், அந்த தீரன், அழிவற்றதான மோக்ஷ வீட்டை தவறாமல் தானாகவே அடைந்திடுவான்.

13. அம்பிகையே! இருக்கின்றே னென்னும் ஒரே அம்சத்துடன் கூடிய சைதன்ய சொரூபம் சக்தியெனப்படும். அந்த சக்தியினால்தான் இந்த உலகமெல்லாம் பிரகாசிக்கிறது. சர்வ பிரபஞ்சமும் சக்தியின் அம்சமாகிய மனமேயாகும். அது சகல பற்றுக்களும் அற்று நிற்பதுதான், நிஷ்களை ஞானமாகும். அந்த ஞானமே ஆத்மாவாகும்.

14. அன்னியமாய்த் தோன்றும் சகலமுமற்று ஏக சொரூபமாய், ஞானப் பிரகாச மாத்திரமாய், காணக்கூடிய காட்சிகள் அற்றதாய், நானென்னும் உணர்வாகிய ஒரே அம்சத்துடன் கூடிய, சூனியநிலை எதுவோ, அதுவே பரம் பொருளுடன் சேர்க்கக்கூடிய, உய்யக்கூடிய, மோட்சத்தை தரக்கூடிய விதையாக சொல்லப்படுகிறது.

அதுதானே முத்திக் குபாய மதுவே
சதுபாயர் சார்குணந் தானு — மதுவே
பிரஞ்ஞை திரத்தன்மை பின்னு மதுவே
தருமம் விவேகியர்க்குத் தான்மற் — றரிதாம் 8

அதுவேநற் றீர்த்த மதுவேயாந் தான
மதுவே தவமாகு மைய — மிதிலில்லை
யெவ்வுபா யத்தினு லேவாயு விற்சலன
விவ்வுளங்கட் டப்படுமோ வெண்ணுங்கா — லெவ்விதமும் 9

சித்தஞ் சிறிதசையச் சம்சார நிச்சலமாச்
சித்தநிலை நிற்கமுத்தி சித்தமிது — சித்தந்
திரமாக்க வேவேண்டு மாதலினுற் றீமான்
பரமாம் பிரஞ்ஞையினுற் பாரஞ்சீ — தொருமையுறும் 10

அந்தவே காந்தத் தடையுஞ் சுகமதுவே
யந்தமிலா வத்தியந்த வானந்த — மெந்தக்
கருமமுமி லப்பரத்திற் கற்றவனு மார்தா
னிரமித் திடானீ யிசைப்பாய் — பிரிவாம் 11

விடயஞா னம்போய் விரிநிட் களமாய்
விடயமில் ஞானபரன் வீடு — மடைய
வவாவிலனே னுந்தீர னட்சயமா மோட்சந்
தவாதுற் றிடுவனே தானே — சிவையே 12

இருக்கின்றே னென்கலையோ டேய்ந்தசை தன்ய
வுருசத்தி யஞ்சீதா லொளிரும் — பிரபஞ்சஞ்
சர்வஞ்சத் தித்யானஞ் சார்நிட் களஞானஞ்
சர்வ நிராலம்பந் தானயலாச் — சர்வமிலா 13

அத்துவித மாகி யறிவொளி மாத்திரமா
யெத்து மகமமிசத் தெச்சூன்ய — முத்திக்கு
வித்ததுவே யென்று விளம்பும் பரயோகத்
துய்த்திடுவ தாகத்தா னுற்றகத்தை — நத்தாது 14

15. இருப்புணர்வாய் நிற்க விரும்பாது, நேர்வழியாகிய காலோத்தர ஞானமார்க்கத்தை விட்டு சக்கரங்கள், நாடிகள், சக்கரங்களின் தாமரைகளில் வீற்றிருக்கும் தேவதைகள், அவற்றிற்கான மந்திர அட்சரங்கள், சூரிய, சந்திர, அக்னி மண்டலங்களின் பலவித மூர்த்தி பேதங்கள் இவற்றை ஒருநாளும் கொஞ்சமும் நினையாதே.

16. பிராண சலனத்தை நிறுத்தும் பலவிதமான மந்திரங்கள், உயிரின் சலனத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் கும்பகம் தாரணை முதலானவைகள் அத்தனையும், அழிவற்ற முக்தியை அடைய விருப்பமுள்ளவர்கள் அனுஷ்டிக்கத் தேவையில்லை.

17. “கவனத்துடன் கேட்பாய்! பரவஸ்துவானது, ஞானத்தினால் மட்டுமே அறியத்தகுந்தது. ஆகையினால் கொஞ்சமும் தனக்கன்னியமாக அந்த பரவஸ்துவை அறிய வேண்டியது இல்லை. மனதால் செய்யப்படும் பூஜை, புனிதமான ஜெபம் தேவாதா மூர்த்திகளை தியானிப்பது முதலான எதுவுமே தேவையில்லை.”

18. சலனத்தையடைந்து பகிர்முக விஷயங்களை பற்றும் மனமுடையவர்களுக்கு, பந்தத்தை ஏற்படுத்துவதற்கான காரணங்கள், எப்பொழுதும் உண்டாகிக் கொண்டேயிருக்கும். அவர்கள் வெளிமுகமாகத் திரியும் மனத்தை உள்முகமாக்கி, தனதியல்பான உண்மை நிலையில் நிற்கச் செய்தால், எந்தவிதமான துன்பமும் அடையமாட்டார்கள் என்பதை உணர்வாய்.

19. மலமற்ற தூய சொரூபமானது உள், வெளி, மேல், கீழ், நடு என்ற திக்குகள் ஒரு சிறிதும் இல்லாததால், எல்லா உருவங்களுமாய், தனக்கென ஒருவிதமான உருவமும் அற்றதாய், தன்னாலேயே தன்னை அறியக்கூடியதாய், சுயம்பிரகாசமாய் விளங்குகிறது. அப்படிப்பட்ட அந்த உண்மையான சொரூபத்தைச் சேர்வாயாக.

20. ஜீவர்கள், ஒன்றிய மனத்துடன் எந்தெந்த கதியினை அடைய வேண்டுமென்ற நோக்கத்துடன், தொழில்களை செய்கிறார்களோ அதன்படி அந்தந்த கதிகளை அடைகிறார்கள். ஆதலால் குற்றம் நீங்காத அந்த தொழில்களைச் செய்யாமல், புறவிஷயங்களில் லட்சியத்தை வைக்காமல், மனதை உள்முகமாக்கி, பார்வைக்கு எட்டாத சொரூபத்தையே தியானிப்பாயாக.

21. உள்ள பொருள் ஏகமே, ஆதலால் அதற்கு சுபாவஸ்திதியில் எதுவுமேயில்லை. வேத சாஸ்திரங்களில் கர்மங்களோ அதன் பலன்களோ இருப்பதாகச் சொல்லப்படும் இவையாவும் உண்மையல்ல. பேதங்களுடன் காணப்படும் உலகமும் இல்லை. பிரபஞ்சத்தில் உலகப்பற்றுள்ள ஜீவனும் இல்லை.

சக்கரங்க ணாடிகள் சார்பதும தேவதை
யக்கரங்கண் மண்டலமூர்த் தாதியா — மிக்கவிவை
யோர்போது மற்பமுமே யுன்னி யிடத்தகா
நேர்மார்க்க மாமிதனை நீத்துயிரி — னோர்யாப்பாம் 15

கும்பகமு மந்திரக் கூட்ட முயிர்ச்சலனத்
தம்பனமுன் னுயவாந் தாரணைதா — மென்பவைக
ளத்தனையு மாசரிக்க வேண்டாவா மட்சயமா
முத்தியிச்சை யுள்ளோர் முயன்றென்றுஞ் — சித்தமதால் 16

பூசை வணக்கம் புரிசெபஞ் சிந்தன
மாசரிப்ப தேதுமே யங்கில்லை — பேசுமது
கேவலம் ஞேயமென்று கேளினிக் கிஞ்சிலன்ய
மாவறிய வேண்டுவதின் றுஞ்சலன — மேவி 17

வெளிவிடயம் பற்றும் விரிமனத்தார்க் கென்றும்
விளையும் வெகுபந்த வேது — வெளியே
திரியுஞ்சித் தத்தைத் திருப்பநிலை யுற்றே
யொருதுனிமே வாருலகி லோர்வாய் — நிருமலமாய் 18

உள்வெளிமேல் கீழ்நடுதிக் கோர்சிறிது மின்றியே
யுள்ளவுரு வெல்லாமா யோருருவு — மில்லதாய்த்
தான்றனக்கே வேத்தியமாய்த் தானே யிலங்கிடுமாற்
பூன்றமா மொன்று புணர்ந்திடுக — வூன்றிமனம் 19

எவ்வெதன் றிட்டியா லெவ்வுயிர்செய் யுந்தொழில்க
ளவ்வுயிர்க் கக்கதியுண் டாதலா — லெவ்வ
மறுவவை சாரா தயற்றிட்டி யற்று
ணிராலோகந் தானே நினைவா — யொரேமெய்யால் 20

ஏது பலங்கருமு மில்லை சுபாவத்தி
லோது மிவையாவு முண்மையல — பேத
வுலகமு மில்லை யுலகப்பற் றுள்ள
விலவுகிகன் றுனு மிலையே — நிலவு 21

22. என்றுமுள்ள உலகமும், தனக்கொரு பற்றுக் கோடில்லாத அந்த பரவஸ்துவேயாகும். பற்றுக் கோடற்ற பரவஸ்துவினாலேயே உலகம் பிரகாசிக்கிறது. ஆகையினால் ஞானியானவன் மனதை அந்தர்முகப்படுத்தி, இந்த உலகிலுள்ள அனைத்துப் பொருள்களையும், அந்த பரம்பொருளின் மயமாகவே செய்து, தானும் பரவஸ்துவின் மயமாகவே ஆகிவிடுவான் என்று அறிவாய்.

23. சிதாகாச சொரூப வடிவமாக, எங்கும் நிறைந்துள்ள சூன்யத்தை எவனொருவன் பாவிக்க மாட்டானோ, அவன் எக்காலத்தும் தன்னைத் தானே பந்தப்படுத்திக் கொள்ளும், பட்டுப் புழுவைப்போல உலகப்பற்றுள்ள சம்சாரியாவான்.

24. எண்பத்து நான்கு லக்ஷவிதமான சிருஷ்டிகளின் உற்பத்தியாகின்ற அனைத்து ஜீவகோடிகளுக்கும், இந்த உலகத்தில் மேலும் மேலும் மிகுந்த துக்கமே உண்டாகிக் கொண்டிருக்கிறது. அந்தத் துன்பமும் துயரமும் நீங்க வேண்டுமானால், மகத்தாகிய அந்தத் சூன்யத்தை கொஞ்சமும் இடைவிடாமல் சிந்தனை செய்வாய்.

25. துன்பமற்ற ஆன்மஞான சாட்சாத்காரம் மனதில் உதிப்பதன் பொருட்டே, நல்ல செய்கைகளையும், நல்ல ஒழுக்கத்துடன் இருக்கும்படியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், ஞான அபேட்சையுள்ள நீ மூர்த்தி தியானம், சாலம்பயோகம் என்பவைகளை நீக்கிவிட்டு நிஷ்பிரபஞ்சமாகிய சொரூப நிலையில் நிலைத்திருப்பாய்.

26. திடமாக கீழாகவுள்ள பாதளத்திலிருந்து, மேலாகவுள்ள சக்தி பரியந்தம், ஒன்றினுக்கு ஒன்று ஆதாரமாகவுள்ள தத்துவங்களனைத்தும், யாராலே சூன்ய பாவமாகிய அஸ்திரத்தைக் கொண்டு வீழ்ச்சியடையுமோ, அவரே சூரர். அந்தச் சூரரே சூனிய ஞானிகளென்று அறிந்து கொள்வாய்.

27. ஒருவன் கீழான விஷய போகங்களில் மனதைச் செலுத்தாமல், குரங்கைப் போல் சதா சலித்துக் கொண்டிருக்கும் மனதை உள்முகமாகத் திருப்பி, சர்வ சூனியமாகிய பதத்தில் நிலைபெறச் செய்திடுவான். அப்படி ஸ்தாபிக்கச் செய்வதால், அவன் முக்தி ரூபத்தை அடைவான்.

28. அனைத்தும் கடந்து சிருஷ்டியிலுள்ள சகல தத்துவங்களிலும் வேறாகயில்லாமல், ‘தேகமே நான்’ என்ற பாவத்திற்கு அன்னியமாய், “நான்” என்னும் சொல்லின் உன்மைப் பொருளுக்கு அனன்யமாய்ப் பிரகாசிக்கும், பரிபூரண சித்சொரூப ஞானமே, எங்கும் வியாபித்துள்ள மேலான பொருளாகும்.

நிராலம்ப மிந்த நிகிலமு மன்றி
நிராலம்பத் தாலொளிரா நிற்ப — நிராலம்ப
மாகச்செய் திந்த வனைத்து நிராலம்ப
மாகிடுவ னென்றே யறியுருவற் — றேக 22

வியோமவடி வாகும் வியாபகமா சூன்ய
மியாதொருவன் பாவித் திடானே — லியாண்டுமவன்
பீசகோ சக்கிருமி போலப் பிரபஞ்ச
பாசசமு சாரியாம் பார்நான்காப் — பேசும் 23

அகிலமாம் யோனியிலு மாருயிர்யா விற்கு
மிகக்கிலே சம்பொருந்து மேன்மே — லகிலக்
கிலேசமுமே நீக்குதற்குக் கேண்மாசூன் யத்தை
யிலேசமறுச் சிந்தை யியற்று — கிலேசமின்மெய்ஞ் 24

ஞானவுத யப்பொருட்டே நற்கிரியை சற்சரியை
தாநவிலப் பட்டதாற் றுஞென்றை — மானதத்தி
னுட்கருதுஞ் சாலம்ப யோகந் தனையுமொரீ
நிட்பிரபஞ் சத்தே நிலைநிற்பாய் — திட்பமாம் 25

பாதலமுன் பாகப் பகர்சத்தி யந்தமா
யாதரப் பட்டவிவை யத்தனையும் — வீதலுறுஞ்
சூனியமா மத்திரங்கொண் டாராலே சூரரவர்
சூனிய ஞானியராச் சுட்டுறுவோ — ரீன 26

விடயத்தி லாசை விடாதே குரங்கை
விடச்சலிசித் தத்தை விடாது — மடக்கிச்
சருவசூன் யப்பதத்திற் றுபிக்க வஃதா
னிருவாண முற்றிடுவ னேரே — பரமாய் 27

அகிலதத்து வத்து மபின்னமா யாக
மகமென் பதற்கனிய மாகி — யகமெய்ப்
பொருளுக் கபின்னமாம் பூரணசித் தெங்கும்
பொருந்துமுக முள்ள பொருடான் — றெரியுமஃ(து) 28

29. என் அன்புக்குரியவளே! ஆஹா! இது என்ன அதிசயம் பார்! கண்களுக்குப் புலப்படும் ஆகாசத்தைப் போல, அகில புவனங்களின் உள்ளேயும், வெளியேயும், ஒரே சொரூபமாய் வியாபித்து உருவமற்றதாய் பரமானந்தவஸ்து விளங்குகிறது. அப்படிப்பட்ட ஆனந்தமய வஸ்துவினுள்ளே ஆழப்படிந்தவர், அப் பரமானந்த வடிவமேயாவர்.

30. விறகினை சார்ந்திருக்கின்ற நெருப்பானது, விறகில்லாவிடில் எப்படித் தானே அணைந்துவிடுமோ அதைப்போன்றே, பற்றுவதற்குரிய விஷயங்கள் இல்லாமல் போனால் பலவற்றை நினைந்து அலையும் மனமும், தானே ஓய்ந்து சாந்தியை அடைந்துவிடும்.

31. பற்றுக்களை உண்டாக்குகின்ற பொருட்களால் மோகமடைதல், அதன் வேட்கையால் மயங்குதல், ஏமாற்ற அதிர்ச்சியினால் மூர்ச்சையடைதல், சொப்பனம் ஆகிய நான்குவித அவஸ்தைகளையும், தூக்கத்தையும், விழிப்பு நிலையும், வேறு வேறாக கூறப்படும் இந்த எல்லா அவஸ்தைகளையும், ஒழித்துவிட வேண்டுமென்று உணர்வாயாக.

32. ஸ்தூலமாகவுள்ள தேகத்தில் சூட்சுமமாக வந்து சேர்ந்திருக்கின்ற, பிராணன், மனம், புத்தி, அகங்காரமாகிய இவையாவிற்கும் ஏகமான சித்சொரூபமானது அன்னியமேயென்று தியானம் புரிவதால் அந்த சித்சொரூபத்தையடைந்து, அதிலேயே நிலை பெறலாமென்று உணர்வாய்.

33. தூக்கத்தினாலும், எண்ணங்கள், முதலியவற்றாலும் பிளவுபட்ட மனமானது, மூடத்தனம் அடைகிறது. இவ்வாறு சீரழிந்த மனத்தை சுயமுயற்சியுடன் தன் நிலையில் நிலைபெறச் செய்திடுவாய். விடாமுயற்சியுடன் அந்த நிலையிலேயே மனதை வைத்திடுவாய்.

34. 'சித்' சொரூபமாக, சித்தமானது எப்பொழுது ஸ்திரத்தன்மை அடையுமோ, அப்பொழுது அந்த மனதை எந்த விதத்திலும் சலனமுறும்படி செய்யாதே! வேறெதையும் சிந்திக்க வேண்டியதில்லை. சித்தத்தை உற்பத்தி ஸ்தானத்திலேயே கட்டுபடுத்தி, சலிக்காமல் இருக்கும்படி செய்வாயாக.

35. பந்தப்படுத்தும் விஷயப்பற்றை பற்றிக் கொள்கின்ற மனதை, வெளிமுக பற்றுகளே இல்லாமல் செய்திடுவாய். தனக்கன்னியமான ஆசிரயத்தை பற்றிக் கொள்ளும் மனத்தை நிச்சலமாகச் செய்து கொஞ்சமும் சலிக்கச் செய்யாது சாந்தி நிலையை அடைவாயாக.

ஆகாயம் போல வகிலத் தகம்புறமு
மேகாங்க மாயுருவ மின்றியதா — மாகா
பரமானந் தத்துட் படிந்தவரன் பேயப்
பரமானந் தப்படிவர் பாராய் — சருவலுறும் 29

இந்தனமில் லாவெரிதா னெவ்வண்ணந் தான்றுனே
மந்தமாய்ச் சாந்தியினே மன்னுமோ — வந்தவிதம்
பற்றுபொரு ளற்றுற் பரந்தமன முஞ்சாந்தி
யுற்றுவிடுந் தானுக வோய்ந்ததனுற் — பற்றலுறும் 30

மோகிகை மாயையே மூர்ச்சிகை சொப்பன
மாகிய விந்நான் கவத்தைகளு — மேக
சுழுத்தியொடு சாக்கிரஞ் சொல்லுமிவை யெல்லா
மொழித்துவிட வேண்டு முணர்வா — யழுத்தமாம் 31

தேகமிதிற் சூக்குமமாச் சேருமுயிர் சித்தபுத்தி
யாகுமகங் காரமிவை யாவுக்கு — மேகசித்
தன்னியமே யென்றுசிந்தை யாற்றவே யச்சித்தை
மன்னிடுவா னென்று மதித்திடுநீ — பின்னமாம் 32

நித்திரையி ஞலு நினைவாதி யாலுநிதஞ்
சித்தந்தான் மூடமிகச் சீரழியுஞ் — சித்தமிதை
யெத்தனத்தா லேயுணர்த்தி யேகாமற் றன்னிலையில்
வைத்திடுவாய் மேன்மேலும் வையதனுற் — சித்துருவாய்ச் 33

சித்தமெப் போது திரமாகு மெவ்விதத்து
மத்தைச் சலிப்பித்த லாகாதே — யித்தனையுஞ்
சிந்திக்க வேண்டுவதின் றுங்கேயச் சித்தத்தைப்
பந்தித்து நிச்சலமே பண்ணுவாய் — பந்திக்கும் 34

ஆசிரயம் பற்றியதா மச்சித்த மங்ஙனமே
யாசிரய மின்றியதா யாக்கிடுக — வாசிரயம்
பற்றுசல நிச்சலமாப் பண்ணியந் நிச்சலத்தைச்
சற்றுஞ் சலிப்பியா தைசாந்தி — யுற்றதனல் 35

36. லயமடையும் காலத்திலும் அந்தந்த பூதங்களில் உள்ள அந்தந்த ஆகாயம், மாசுபடாமல் இருப்பதுபோல, எண்ணற்ற நாமரூப ஜீவர்களில் வியாபித்திருந்தும் அவற்றின் எந்த குற்றமும் பற்றாத் தன்மையால், ஒப்பற்று விளங்கும் பர சொரூபமாகிய தன்னை இடைவிடாமல் தியானம் புரிவாய்.

இவ்வெல்லாப் பூத விலயமுண் டாகிலிவற்
றெவ்வெவ்விண் ணும்விமல மேபோல — வவ்வவ்
வுருவம் வியாபித்து மோர்மலமி றன்னைப்
பொருவி றியானம் புரிவாய் — மருவும் 36

37. சதா சலித்துக் கொண்டிருக்கும் காற்றுக்கு சமானமான மனதை, சலிக்கவிடாமல் நிற்கும்படி செய்யும் சாதனம் எதுவோ, (பரசொரூப தியானமே) பிறவி எடுத்ததின் பயனாகும். அதுவே கல்வித் திறமுமாகும்.

அதுவே சனன மடைந்ததன் பேறு
மதுதானே பாண்டித்ய மாகு — மெதுதான்
சலனமுறும் வாயு சமஞ்சித்த மென்றுஞ்
சலனமறச் செய்சா தனந்தன் — னிலநீத்துச் 37

38. மனதை அதற்குரிய இடம்விட்டு, மேலேயும், மத்தியிலும், கீழேயும் மற்றெந்த ஸ்தானங்களிலும் தாரணை செய்ய (நிலை நிறுத்த) வேண்டாம். அந்தரங்கத்தில் செய்யும் பவானையைவிட்டு, வெளியேயும் எதையும் பற்றிக் கொள்வதற்கு இடந்தராமல், எப்பொழுதும் பற்றற்ற நிலையைப் பழகுவாய்.

சித்தத்தை மேலேயுந் தாரணஞ் செய்யற்க
மத்தியிலுங் கீழிலு மற்றெங்குஞ் — சித்தமீ
தந்தரங்க பாவனைவிட் டாசிரய மின்றியதாச்
சந்ததமுஞ் செய்திடவே தானதனை — மந்த 38

39. மூடத்துவம் நிறைந்த தூக்கத்திலிருந்து மனதை எழுப்பி, விழித்திருக்கும்படி செய்திடுக. விழிப்பு நிலைக்கு வந்தவுடன், மனம் சலனம் அடையுமானால் அதை ஒடுக்கு. இப்படி தூக்கம், சலனம் ஆகிய இரண்டுமற்ற நிலையடைந்து, உண்மை நிலையாகிய இதனில் சலிக்காமல் நின்றிடுவாய்.

உறக்கத்தி னின்று முணர்த்திடுக சித்த
முறிற்சலனம் பின்ன ரொடுக்கா — யுறக்க
மலைவென்னு மிவ்விரண்டு மற்றநிலை யுற்று
னிலையிதனி னிச்சலமா நில்லாய் — வலையாம்வேற்(று) 39

40. வேறு பற்றுக்கோடற்று, தங்குவதற்கு வேறு இடமின்றி, தன்னிடமுள்ள குற்றமெல்லாம் நாசமாகும்படி, எல்லாவித பற்றுகளும் நீங்கி, ஆசாபாசங்களை அடையாமலிருப்பதே, ஞானத்தினாலடையக் கூடிய முக்தி லட்சணம் ஆகும். இதை மனதில் உறுதியாக வைத்திடுவாய்.

ஆசிரய மின்றியதா யச்சித்தந் தானென்று
மாசறவா லம்பமெலா மற்றதாய்ப் — பாச
மனவவத்தை மன்னிடா மைஞேய முத்தி
தனதிலக்க ணந்தான் றரியாய் — தனக்கயலாம் 40

41. தனக்கு அன்னியமாக உள்ள சகல பற்றுக்களையும் நீக்கி, மனதை இதயத்தில் பதியும்படி ஊன்றி நிறுத்தினால், அப்பொழுது எந்த அறிவானது விளங்குகிறதோ, அந்த அறிவை வலிமை அடையும்படி இடையறாமல் அப்பியாசம் செய்வாயாக.

ஆலம்ப மெல்லா மறவிட்டே யம்மனத்தை
யேலத் தரிப்பித் திதயத்தே — சாலத்
துலக்கமா யெவ்வறிவு தோன்றுமோ வஃது
பலக்கவே யென்றும் பழகவ் — விலக்கயரா(து) 41

42. பழகும் லக்ஷியத்தில் சோர்வடையாது, அந்த பரம்பொருளாகிய சூனிய வஸ்துவை, யாரொருவர் தியானித்து, அதிலேயே ஒன்றிடுவரோ அவர் ஜனன மரணமில்லாத, பெருமை மிகுந்த முக்தி நிலையை அடைந்தே தீருவர் என்பதை அறிந்திடுவாய்.

அப்பரமாஞ் சூனியத்தை யார்தியா னித்தேயவ்
வப்யாச தற்பரரா யாவரோ — தப்பார்
பிறப்பிறப்பில் லாத பெருமையுறுந் தான
முறப்பெறுவ ரேயவரென் றோர்வாய் — சிறப்பாரும் 42

43. சிறப்பான தேவர்களை வணங்குவதும், தேவியரை வழிபடுவதும், வேறு வேறாக கூறப்படும் பாவமும், புண்ணியமும் அவற்றின் பலன்களும், இந்தப் பலன்களை ஆசிரயத்திருக்கின்ற விஷயங்களும், விஷய ஞானமும் ஆகிய இவை அனைத்தும் மிகப்பெரிய சம்சார பந்தமாகும்.

44. பாசம் என்னும் ஆசிரயங்களாக இருப்பவையெல்லாமே, தொந்தங்களென்று (இரட்டைகளாக) சொல்லப்படுகின்றன. அவற்றை விட்டால் பரவஸ்துவானது தோன்றும். அந்தத் தொந்தங்களை விட்ட மகாயோகி பந்தமற்ற ஜீவன் முக்தனாவான். சரீரத்திலிருந்து விடுதலையடையும்போது, அவன் விதேகமுக்தன் ஆவான்.

45. பிராரப்த வினையால் வந்த இந்த சரீரத்தை வெறுப்பினால் ஒழித்துவிட எண்ணுவது அறிவுடையோர் செய்யக் கூடியதன்று. சரீரத்தை உலகத்தில் பிறப்பித்த பிராரப்த வினையானது தீர்ந்தவுடன், இந்த தேகமாகிய சுமை தானாகவே நீங்கிவிடும்.

46. உடலுள் இருக்கும் இதயத்தாமரையில் ‘நான்’ என்று எந்த ஒரு சித்சொரூபம் பிரகாசிக்கிறதோ அந்த வஸ்துவானது நிர்மலமாயும் நிச்சலமாயுமுள்ளதாகும். அதனிடம் உதித்து ஒடுங்குவதான அகங்காரத்தை நீக்குதலால், அந்த சித்சொரூபமே முக்தி சுகத்தைத் தரும் என்று துணிவுடன் இருப்பாயாக.

47. உள்ளத்தில் வந்து சேர்கின்ற எந்த உபாதியையும் சார்ந்திருக்காமல் உள்ளதாகிய சித்சொரூபம் எது ஒன்று உள்ளதோ அதையே நானென்று எப்போதும் பரிவோடு தியானித்து எல்லா பற்றுக்களையும் நீ ஒழித்து விடுவாயாக.

48. அறிவால் தேசம், ஜாதி இவற்றைச் சேர்ந்தவை, குற்றமற்றதாக கருதப்படும் குலம், அந்த குலத்தின் ஒழுக்கம் இவை பற்றிய அத்தனை பாவனைகளையும் நீக்கி, நானென்னும் தன்னிலை பாவனையொன்றையே பற்றிக் கொண்டு பயமின்றி எப்பொழுதும் அப்பியாசம் செய்வாய்.

49. ‘நான்’ ஒருவனே இருக்கிறேன். எனக்கு உரிமையானவன் ஒருவனுமில்லை. நானும் வேறு ஒருவனுக்கும் உரியவன் அல்ல. எவனொருவனுக்கு நான் உரியவனோ அவனையும் நான் காணவில்லை. எனக்கு எவனாவது உரியவனோ என்றால் அவனையும் நான் காணவில்லை.

தேவருந் தேவியரு மங்ஙனமே யன்னியமாம்
பாவமற முந்தற் பலன்களு — மேவியிடு
மாசிரய மாசிரய ஞானமுமே யானவிவை
மாசமு சாரபந்த மாலாகும் — பாசமாம் 43

தொந்தமென் றாசிரயஞ் சொல்லப் படுமாமத்
தொந்தம் விடப்பரந் தோன்றுமே — பந்தமில்
சீவன்முத் தன்யோகி தேகத் தியாகத்தா
லாவன் விதேகமுத்த னன்றுவினை — மேவும் 44

உடலை விராகத் தொழித்திடுகை புத்தி
யுடையவராற் செய்ய வொண்ணாதே — யுடலிதனை
யாரம்பித் துள்ளவினை யற்றவுட னிவ்வுடல
பாரந்தா னேயகலும் பாருடலுட் — சாரும் 45

இதயகம லத்தே யகமுருவா மெச்சித்
ததுநிமல நிச்சலமே யாகு — முதிக்கு
மகங்கார நீக்குதலா லச்சித்தே முத்தி
சுகங்கொடுப்ப தென்று துணியா — யகஞ்சேர் 46

சருவ வுபாதியுஞ் சாரா துளசித்
துருவ மெதுவொன் றுளது — நிரந்தர
மந்தச் சிவமகமென் றன்பாற் றியானித்தே
யெந்தவா சத்தியுநீ யெற்றுதி — புந்தியால் 47

தேசமுஞ் சாதிமுத லாமிவற்றைச் சேர்ந்தனவு
மாசகல்வர் ணாசிரம மன்னினவும் — பேசுமிப்
பாவனைக ளையகற்றிப் பற்றியே தன்னிலையின்
பாவனையே யென்றும் பழகுபய — மேவா 48

ஒருவனா னெற்குரிய னோரொருவ னில்மற்
றொருவற்கில் யானு முரிய — னொருவ
னெவற்குரியன் யானவனைக் கண்டிலேன் யானெற்
கெவனுரியன் கண்டிலேன் யானே — யவிகார 49

50. மாறுதலற்ற 'நானே' பரப்பிரம்ம சொரூபமும், ஞான மூர்த்த குருநாதனுடைய சொரூபமும், உலக ஈசுவர சொரூபமும் ஆவன் என்னும் நிச்சயத்தை அடைந்தவனே, நல்ல ஸ்திர முக்தியடைந்த புருஷனாவான். முரண்பட்ட மார்க்கங்களில் செல்பவன் பந்தமுடையவன் என்று நீ அறிவாயாக.

நானே பரப்பிரம்ம நாதனுல குக்கீச
ஞுனுவிந் நிச்சய மார்புருடன் — றுனேநன்
முத்தனு மன்றி முரண்வழியிற் செல்புருடன்
பெத்தனு மென்றுநீ பேணுடனுன் — புத்தியகன்(று) 50

51. தேகமே 'நான்' என்னும் புத்தி நீங்கி எப்பொழுது ஒருவன் தன்னை தேகமற்றவனாகவே, தனது ஞானக் கண்ணினால் தானே காண்பானோ அப்போதே அனைத்து ஆசையையும் ஒழித்து, சாந்தியின் சுகத்தை தானே அடைந்தவனாவான்.

என்றெருவன் றேக மிலனுக வேதன்னைத்
தன்ஞானக் கண்ணினுற் றுன்காண்ப — னன்றே
யனைத்தினு மாசை யறவிட்டுச் சாந்தி
தனைத்துன்னி யோனுவன் றுனுய்த் — தனித்த 51

52. தானாம் ஏக சொரூபனும், சாஸ்திரங்களில் பிறப்பில்லாதவன் என்றும் ஈசுவரனென்றும் யார் சொல்லப்படுகின்றானோ; எவன் சரீரமில்லாதவனாகவும், குணமற்றவனாகவும், ஆத்ம சொரூபமாகவும் இருக்கின்றானோ அவனே நான். இதில் சந்தேகமில்லை.

அசனீச னென்றெல்லா நூற்களிலு மார்தா
னிசைக்கப் படுவானே வென்று — மசரீர
ஞங்குணமில் லானுன்மா வாமவனே யான்சிறிது
மீங்கிதனி லைய மிலையகமா — யோங்குமொரு 52

53. அகம் என விளங்கும் ஏகனாகிய 'நான்' உண்மையறிவாகிய விஞ்ஞானமாத்திரமாக உள்ளவனும், மிகத் தூய்மையானவனும், நன்கு விடுபட்டவனுமாவேன். எப்பொழுதும் எங்கும் இருப்பவனாவேன். நான் அந்த காரணங்களினால நான் அந்தக் காலதேசம் எனப்படுபவைகளுள் ஏதோன்றும் அல்லன். எது ஒன்றினாலும் பற்றுவதற்கோ விடுவதற்கோ முடியாதவன். துக்கமற்றவன்; எப்பொழுதும் பிரம்ம சொரூபமயமானவன்.

விஞ்ஞான மாத்ரன் விசுத்தன் விமுத்தனு
னெஞ்ஞான்று மெங்கு மிருப்பனு — னஞ்ஞாயத்
தொன்றலனுன் பற்றவிட வொண்ணுனுன் றுக்கமிலா
னென்றும் பிரம்மமயன் யானுயிரு — டொன்றுகி 53

54. உயிரோடு ஒன்றாகிய மனித உடம்பில், உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை அந்தக்கரணத்தை முதலாகவும், புறத்திலுள்ள சருமப் போர்வையை இறுதியாகவும் கொண்ட, இந்த தேகத்திற்கு அன்னியமாய் சித் சொரூபமாய், பூரணமாய், அம்ருதமாய், தான் தானகவே நிலைபெற்று பிரகாசிக்கும் ஆத்ம சொரூபமே நானென்று அறிவாய்.

உச்சி முதலுள்ளங் காலளவா யுட்புறம்
பிச்சருமப் போர்வை யிறுதியா — மிச்சடத்துக்
கன்னியசித் தாய்முழுது மாயமுத மாய்த்தானே
மன்னியவான் மாநான் மதியெதிரே — துன்னிய 54

55. எதிரில் நினைந்து காணக்கூடிய சராசரங்களுக்கும் இறைவன் நானே. இவையாவும் தோன்றுவதற்கு தாயாகவும் தந்தையாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருப்பவன் நானே. முக்தியடைய விருப்பமுள்ளவர்கள், அந்தத் துரிய நற்பதமாகிய என்னையே, உள்ளத்தில் தீவிரமாக தியானிப்பார்கள்.

இந்தச் சராசரங்கட் கீசனுன் றுயுடனே
தந்தையுந் தந்தைக்குத் தந்தையுஞ் — சிந்தனங்கொண்
டத்துரிய நற்பத மாமெனையே சிந்திப்பார்
முத்தி விருப்பர் முனைந்துள்ளே — நித்தம் 55

56. உள்முகமாகி என்றும் பூஜிப்பதற்கு உரியவன் நானே. சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா முதல் சகல தேவர்களும், தேவமாதர்களும், மனிதர்களும், யக்ஷர்களும், கந்தர்வர்களும், நாகலோகவாசிகளும், மற்ற எல்லோரும் பலவிதமான யாகங்களாலும் என்னையே அர்ச்சிப்பர் என்று அறிவாயாக.

பிரமன்முன் ஞுந்தேவர் பேணுமர மாதர்
நரரியக்கர் கந்தருவர் நாகர் — நிரையாலு
மெச்சம் பலவாலும் யான்பூச் சியனெனையே
யர்ச்சிப்ப ராரு மறியருளா — நச்சி 56

57. அருளை விரும்பி அரிய தவங்களினாலும், தானங்களினாலும் அநேகவித நல்லறங்களாலும், யாவரும் என்னையே அர்ச்சித்து வழிபடுவார்கள். பரந்த சராசர சிருஷ்டியும், அதை சார்ந்த அனைத்தும் ஒருவனாகிய நானே என்று உணர்வாய்.

58. உருவம் அற்றதால் ஸ்தூல, சூட்சும, காரண தேகோபிமானி நான் அல்ல. படைப்பிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் பந்து நானே. ஞானமே சொரூபமாக உடையவனும் சர்வவியாபகனும் ஈசுவரனும் குற்றமற்றவனும் அவஸ்தைகள் எதுவுமில்லாதவனும் நானே ஆவன். பின்னும் நான் பிரபஞ்சமற்றவன்.

59. நிலையானது என்று கூறப்பட்ட உண்மைப் பொருளானது ஆதியற்றது. அதுவே ஞான வடிவமாய் பிறப்பில்லாத மிகப் பழமையானது. அப்படிப்பட்ட அது இதய குகையில் எப்பொழுதும் உருவமோ உலகமோ களங்கமோ உவமையோ பற்றுக்கோடோ இல்லாமல் மனதினால் நினைப்பதற்கோ பார்ப்பதற்கோ உணர்ந்து கொள்வதற்கோ முடியாததாக இருக்கிறது.

60. எப்போதும் சாசுவதமாய் விளங்குவதும், இடைவெளியற்றதும், எங்கும் நிறைந்த சற்பிரம்மமாகிய அந்த பரவஸ்துவே நானென்று, நீ அடிக்கடி அந்த ஏகாத்ம சொரூபத்தையே தியானம் செய். இப்படிப் பலகாலம் எவனொருவன் 'அவனே நானென்னும்' பாவனை செய்து, சலனமற்று இருப்பானோ அவன் சாவா நிலையுற்று பரப்பிரம்ம சொரூபமாகவேயாவான்.

61. என்றும் சித்தமாயுள்ள முக்தி நிலையை அனைவரும் அடையும் பொருட்டு ஆன்ம பாவமான ஞானத்தின் சொரூப லக்ஷணம் இவ்வாறானதென்று என்னால் சொல்லப்பட்டது. தன்மயமானவளே! சாதகர்கள் ஆசிரயிக்க வேண்டிய ஆசாரங்களை இப்பொழுது சொல்லுகிறேன். நீ அமைதியாகக் கேட்பாயாக.

62. பாவங்கள் தீர புண்ணிய நீராடுவதும், மந்திரங்களை ஜெபிப்பதும், நித்திய ஹோமம், தேவதாமூர்த்திகளின் பூஜை, அக்னியில் செய்யப்படும் காரியங்கள் முதலான எந்தவொரு சாதனமும், ஞானப் பயிற்சி மேற்கொண்டவன் அனுஷ்டிக்க வேண்டியதில்லை என்று நீ அறிவாயாக.

63. சிரத்தையுடன் செய்யும் நியமங்களோ, க்ஷேத்திர பீடங்களில் விளங்கும் மூர்த்தி வழிபாடுகளோ, நாம அர்ச்சனைகளோ, பித்ருக்களை குறித்து செய்யும் காரியங்களோ பூமியில் தோன்றியுள்ள புனித தீர்த்த யாத்திரைகளோ, பிரசித்தி பெற்ற புண்ணிய விரதங்களோ இவை யாவும் ஞானாப்பியாசிக்கு தேவையில்லை.

அருந்தவங்க டான மனேகவிதத் தாலு
மருச்சிப்ப ரென்னையே யாரும் — பரந்த
சரவசர பூதங்கள் சார்ந்துளமற் றெல்லா
மொருவனும் யானே யுணர்வா — யுருவிலதால் 57

தூலனுஞ் சூக்குமனுஞ் சூனியனு மல்லனுன்
ஞாலத்தின் பந்துநான் ஞானமயன் — மேலு
நிரந்தரனீ சன்விமல னீடவத்தை யில்லோன்
பிரபஞ்ச மில்லோனுன் பின்னுந் — திரமாம் 58

அனுதிவிஞ் ஞான மசன்மம் புராணந்
தனுதித யக்குகையிற் றங்கி — யெநாளு
முருவமுல கங்களங்க மொப்புப்பற் றின்றிக்
கருதக்கா ணக்கொளப்போ காது — மருவு 59

சனுதனமா யந்தரமில் சற்பிரம்மஞ் சோக
மெனுநீ யடிக்கடிபா ரேகம் — பனுளுமெவன்
பாவித்து நிச்சலனு நிற்பன் பரப்பிரம்ம
மாவனமு தத்தன்மை யார்ந்தான்ம — பாவமாம் 60

ஞானமிவ் வாறு நவின்றிடப் பட்டதா
லானமுத்தி யாரு மடைதற்கு — மானினியின்
றுசார மென்னு லருளப் படுமிதுகே
ணீசாவ தானமா நின்றுநிலை — மாசகல 61

நீராட லுஞ்செபமு நித்தியவோ மம்பூசை
யாரழலின் காரிய மாதியாத் — தேருமோர்
சாதனமு மன்னுேன் றனக்கென்று மின்றுமான்
மாதரசி யேநீ மதியிதனை — யாதரஞ்சேர் 62

நேமமுங் கேத்திரபீ டத்தி னிகழ்சேவை
நாமவர்ச்ச னம்பிதிரர் நற்கருமம் — பூமருவு
தீர்த்தநல் யாத்திரை தேசார் விரதங்க
ளோர்த்திடவற் கில்லையா மொன்றுமே — யார்த்த 63

64. ஞானாப்பியாசிக்கு நூல்களில் கூறப்பட்ட தர்ம அதர்மங்களினால் ஏற்படக்கூடிய பலன்கள் இல்லை. விசேஷித்து கூறப்படும் திதிகளும், தொன்றுதொட்டு செய்துவரும் கர்மங்களும் இல்லை. எல்லாவித கருமங்களையும் ஒழித்துவிடு, எல்லாவிதமான ஆசாரங்களையும் விட்டுவிடு.

65. புகழப்படும் சமயத்தின் ஆசாரங்கள் அனைத்தையும் தள்ளிவிடு. ஏனெனில், எல்லாவிதமான கர்மங்களும் பந்தங்களாக அமையும். ஆதலால், பலவாகத் தோன்றும் சங்கற்பங்களையும், விகற்பங்களையும், தான் பிறந்த ஜாதி தருமத்தையும், அவற்றை சார்ந்துள்ள பற்றுதலையும் தூரத் தள்ளிவிடு.

66. தாமகவே வரும் அணிமா மஹிமா முதலான பலவித சித்திகளும், பாதாளத்தில் மறைவாகவுள்ள பொருள்களை கண்ணெதிரில் தோன்றச் செய்யும் ரசாயன சித்திகள் என்பவையும், கண்ணுக்கு எதிரே பிரத்யக்ஷமாக கிடைத்தாலும் அவற்றை மனதில் பற்றாமல் சாதகன் விலகி நிற்க வேண்டும்.

67. நூல்களில் கூறப்பட்ட சித்திகள் யாவும் ஜீவனுக்கு பந்தங்களாகும். மேலும் இவை தீய ஒழுக்கத்தை தரக்கூடியவையாகும். எங்கும் பிரகாசிக்கும் சித்சொரூபத்தினிடமே, அந்த மேலான முக்தி சுகமானது இருக்கிறதேயன்றி, மேலே சொல்லப்பட்டவைகள் யாவற்றிலும் இல்லை.

68. உள்ளத்தில் சோர்வு நீங்கி, எல்லாவித அவஸ்தைகளிலும், எந்த விசேஷத்தினாலும், தவறு நேராமல் ஆத்ம சிந்தனா யோகத்தில் மனம் ஊன்றியவனாய், எக்காரணத்தை முன்னிட்டாவது உண்டாகிற சந்தேகத்தினால், க்ஷேத்திரத்திலும் அதன் பீடத்திலும் சேவை செய்ய வேண்டுமென்ற குதூகலமாகிய மோகம் மீண்டும் உண்டானால், அதனை விலக்கி விடுவாயாக.

69. சதியே! கேட்பாயாக. ஞானாப்யாசியான நல்ல விவேகி, ஞான சொரூபத்தை ஆசிரயித்த மனத்தினனாய் இருக்க வேண்டும். அற்பமாகிய புழு, பூச்சி, பட்சி, மரம், செடி, கொடி உருவாகவுள்ள தாவரங்கள் முதலான எல்லாவுயிர்களுக்கும் ஒருபோதும் நாசமடையும்படியான எந்த காரியமும் அவன் செய்யக் கூடாதென்று அறிவாய்.

70. அருளை அடைய விரும்புபவன், பூஜைக்காக எந்த ஒரு வேரையும் பிடுங்க வேண்டாம். எந்தவொரு இலையினையும் பறிக்க வேண்டாம். எந்த உயிர்களுக்கும் கோபத்தினால் துன்பத்தைத் தரக்கூடிய செயல் எதுவுமே செய்ய வேண்டாம். மலர்களை ஆதரவு இன்றி செடியிலிருந்து பறிக்க வேண்டாம்.

தருமா தருமந் தருபல னில்லை
மருவு திதியுலக மன்னுங் — கருமமிலை
யெல்லாக் கரும மிகந்திடுல காசார
மெல்லா விதத்து மிகந்திடுக — சொல்லார் 64

சமயவா சாரமே சற்றுமின்றித் தள்ளாய்
சமத்தமாங் கன்மந் தளையா — யமையுமாற்
சங்கற்ப மும்விகற்பஞ் சாதிதரு மஞ்சார்ந்த
சங்கத்தை யுந்தூரத் தள்ளுவாய் — பொங்கும் 65

பலவிதமாஞ் சித்திகளும் பாதாள முன்பா
யிலகுமிர சாயனமு மென்ப — வுலகிற்
பிரத்தியட்ச மாகவே பெற்றாலும் பற்ற
லொருவுகவே சாதக னுண்ணின் — றுரைத்த 66

இவையாவும் பந்தகமா மிச்சீவ னுக்கே
யிவைமேலுந் தாழ்ந்தநெறி யீவ — விவைக
ளியாவையினு மப்பரம முத்திசுக மில்லை
வியாபகமாஞ் சித்துருவம் விட்டுள் — ளயாவறுத்(து) 67

எவ்விசே டத்தானு மெல்லா வவத்தையினுந்
தவ்வலற யோகந் தரித்தோனா — யெவ்விதத்து
மையத்தாற் கேத்திரபீ டத்திற் குதூகலமா
மையலெழின் மற்றதனை மாற்றுதி — நொய்ய 68

கிருமிகீ டம்பறவை கேள்சதியே தாரு
வுருமுதலா மெல்லா வுயிரு — மொருபோது
நாசமுறச் செய்யவொணா நல்லறிஞ னுண்மையறி
வாசிரயித் தோனா யறியருளா — ராசயனாய் 69

வேரெதுவுந் தான்பிடுங்க வேண்டா மிலையினையும்
வேறுபடுத் துஞ்செயலும் வேண்டாமே — சீறி
யினாதை செயவேண்டா மெவ்வுயிர்க்கும் பூவு
மனாதரவாய்க் கிள்ளவேண் டாங்காண் — மனாது 70

71. செடியிலிருந்து தாமகவே உதிர்ந்த தூய மலர்களை எடுத்து, சிவனுக்கு உகந்த பூஜை செய்வதே கடமையாகும். இதைவிட்டு, மந்திரங்களை ஜெபித்து அழிவை உண்டாக்குவதும், ஏவுதல் விரட்டுதல் செய்வதும், பகைமை உண்டாக்குவதும், பிரசித்தமான ஸ்தம்பனமும் பின்னும்,

சுயமாக வேயுதிர்ந்த தூமலர்கள் கொண்டே
செயக்கடவன் பூசை சிவனுக் — கியற்றியிடு
மாரணமுச் சாடனமுன் மற்றவித்து வேடணமும்
பேருற்ற தம்பனமும் பின்னின்னல் — கூரும் 71

72. துன்பம் தரக்கூடிய மந்திர ஜபத்தினால் உயிர்களுக்கு ஜுரத்தை உண்டு பண்ணுதல், பூதங்களையும் கிரகங்களையும் பிறர்மேல் ஏவி விடுதல், ஆவேசத்தை உண்டு பண்ணுதல், வசியமாக்குதல், ஆகர்ஷணம் செய்தல், மோகமடையச் செய்தல் என்ற இந்த இழிவான கர்மங்களை செய்யாது ஒழிக. கல்லிலும், மரக்கட்டையிலும், பூஜை செய்வதை ஒழித்து விடுவாயாக.

சுரமொடு பூதங்கோ டுன்னுமா வேச
முரண்வசிய மாகருட மோக — முரைத்தவிக்
குத்திரகன் மங்கள் குயிற்றற்க கற்கட்டை
யொத்தவற்றிற் பூசை யொழியழியா — முத்தியுறக் 72

73. அழியாத முக்திபெற, க்ஷேத்திர பீடங்களில் விளங்குகின்ற தேவதைகளின் பொருட்டாகக் காட்டப்படும் மாமுத்திரைகளையும், அவற்றை உத்தேசித்து செய்யப்படும் யாகங்களையும் நீக்கி, இதற்குமுன் அவற்றை செய்து வந்ததினால் மனதில் ஏற்பட்ட வாசனைகளையும் அழித்து, எங்கும் நிறைந்த சித்சொரூபத்தையே தியானிப்பாயாக.

கேத்திரபீ டத்திற் கிளர்தேவ தைப்பொருட்டாச்
சேர்த்திடுமா முத்திரையுஞ் செய்மகமு — நீத்துமுன்
செய்யவற்றின் வாதனைக டீர்த்தே வியாபகமா
மெய்யறிவு தன்னையே மேவுளத்தே — செய்ய 73

74. உள்ளத்தில் சமதிருஷ்டியை உடையவனாய், எந்த ஒரு பொருளிலும் ஆசை கொள்ளாமல், சுக துக்கங்கள் நேரிடும் காலத்தில் அவை இரண்டிலும் சம பாவமுற்று, நண்பர்கள், விரோதிகள் ஆகிய இருபாலரிடத்தும் சமதிருஷ்டியுடையவனாய், ஓட்டிலும், பொன்னிலும் பேதமற்ற சமபுத்தியுடையவனாய் இருப்பாயாக.

சமத்துவமே யுற்றுச் சருவாம லாசை
சமனுச் சுகதுக்கச் சார்விற் — சமனுகி
மித்திரர்க ளல்லாதார் மேலுமோட் டிற்பொன்னி
லொத்தகருத். தோனுகி யுற்றகமே — சித்தம் 74

75. மனம் உள்முகப்பட்டு, இந்திரியங்களினால் அனுபவிக்கக் கூடிய விஷயங்களில், ஒருபொழுதும் ஆசை வைக்காமல், அகத்தில் எனதென்னும் மமதையை ஒழித்து, அறிவு சோர்ந்து போகாமல் வலிமையுறும்படிச் செய்து, எதனிடமும் ஆசையே பயமோயின்றி, எப்பொழுதும் ஆத்ம சொரூபத்திலேயே ரமித்துக் கொண்டிருப்பவன் மாசற்ற யோகியாவான் என்று அறிந்திடுவாய்.

பொறிவிட யத்திலொரு போதும் விருப்ப
முறவிடா துண்மமதை யோட்டி — யறிவுரமுற்
றுசைபய மற்றென்று மான்மாவி லேரமிப்பன்
மாசிலா யோகி மதியதனு — லாசில் 75

76.தூயவனாகி, நிந்தையிலும், புகழ்கின்ற துதியிலும் சமபாவமுடையவனாய், எல்லா உயிரினங்களிடத்திலும் சமமான மனநிலையுடையவனாய், எந்நாளும் மாறாமல், தன்னுயிர் போலவே அனைத்துயிர்களிடத்திலும் சமநோக்குடன் பொருந்தியிருக்க வேண்டும்.

சமனுகி நிந்தையிற் சாற்றுதுதி யிற்பின்
சமனுகிச் சர்வபூ தத்துஞ் — சமதிட்டி
மன்னிடவே வேண்டுமான் மாறும லெந்நாளுந்
தன்னுயிர்போல் மன்னுயிரிற் றுன்மோன — மன்னி 76

77. அமைதியில் நிலைபெற்று தர்க்க வாதங்கள் புரிவதையும், லௌகீக கோஷ்டியையும் விலக்குவாயாக. பாழும் கலகத்தையும் தவிர்ப்பாயாக. சாஸ்திரங்களைக் கற்ற கோஷ்டியையும் சாராமல் நீங்கிவிடு. தீய சொற்களுடன், பிறரைப் புகழும் நல்ல வார்த்தைகளையும் விடுவாயாக.

ஒருவுகவீண் வாத முடனுலக கோட்டி
யொருவுக பாழ்ங்கலக மும்பின் — னொருவுக
சாத்திர கோட்டியைச் சாராதே தீச்சொல்லோ
டேத்துநற் சொல்லு மிகந்திடகத் — தார்த்தெழூஉம் 77

78. உள்ளத்து விரைந்து எழும் பொறாமையும், பிறர் மீது கோள் சொல்வதும், ஆடம்பரமும், விருப்பமும், அவற்றைச் சார்ந்த வெறுப்பானதும், மனதில் எழக்கூடிய ஆசையும் கோபமும் பயமும் துக்கமும், ஆகிய இந்த எல்லா விக்ஷேபங்களையும் நீ மெல்ல மெல்ல நீக்கி விடுவாய்.

79. பூர்வ வாசனையின் இரட்டைகளாகிய சுக துக்கம் அனைத்தையும் தொடராத வண்ணம் விலக்கி, எப்பொழுதும் ஜனக் கூட்டங்களை விட்டு விலகி ஏகாந்தமாயிருப்பவன், இந்த சரீரத்துடன் சர்வஞ்ஞனாகி தேஜஸ்ஸுடன் பிரகாசிப்பான் என்று அறிவாய்.

80. அஞ்ஞானத்தை அழிக்கும் மெய் ஞானத்தினால்தான் நல்ல முக்தி பதத்தை அடையமுடியும். மற்ற சித்திகளினால், அத்தகைய மேலான பயனின்றாயினும், அப்யாசிகளாயிருப்பவர்கள் அதை தெரிந்தும் குற்றம் மிகுந்த போகங்களிலும், அணிமா, மஹிமா முதலான சித்திகளிலும் மோகம் கொண்டு, அவற்றை அடைய வேண்டிடுவர்.

81. தூய்மையே உருவான யோகியானவன், வேதங்கள் போற்றும் அஷ்டமா சித்திகள் வந்து சேர்ந்தாலும், அகன்று ஒழிந்தாலும், அதைபற்றிய மகிழ்ச்சியோ வாட்டமோ அடையாதவனாய், நிர்மலமான பிரம்ம சொரூபத்தை உணர்ந்து, மோக்ஷ வீட்டை அடைவதிலிருந்து தப்பவே மாட்டான் என்று அறிவாயாக.

82. ஆத்ம சொரூபத்திற்கு இடமான இந்த சரீரமானது பஞ்ச பூதங்களால் ஆனது. ஏக சிவனும் அந்த சரீரத்திலேயே அமர்ந்திருக்கின்றான். பிரிவற்று எங்கும் நிறைந்திருக்கும் சிவம் முதலாக இந்த பூவுலக பரியந்தம் அனைத்துலகமும் அந்த சங்கரனுடைய சொரூபமேயாகும். இதுவே உண்மை.

83. & 84. உயர்ந்தவரான இத்தகைய ஞானியைக் கண்டு தரிசனம் செய்து, வாசனை மிகுந்த சந்தனாதிகளும், பழங்களும், மலர்களும், நறுமணம் வீசும் தீம்புகையும், பரிமணங்கள் கலந்த ஸ்நானத்திற்குரிய தீர்த்தமும், உடையும், உணவும், நெஞ்சுருகும் உள்ளன்புடன் கொடுத்து, மனம், வாக்கு, காயமென்னும் முக்கரணங்களினாலும் ஒன்றாக இசைந்து, எவர் ஆராதித்திடுவார்களோ அவர்கள், பிறப்பற்று ஜீவன் முக்தி என்னும் ஐக்கிய மார்க்கத்தில், இச்சையுள்ளவராயின், மோட்ச வீட்டையடைவர். எனதாருயிரே! புருஷ ஸ்ரேஷ்டனாகிய அந்த ஞானியை பூஜிப்பவர், அவனால் செய்யப்படும் புண்ணியத்தின் பலனையும், நிந்திப்பவன் பாவத்தின் பலனையும் அடைவார்களென்று மனதில் கொள்வாய்.

ஈரிடையுங் கோளு மிடம்ப மிராகமுஞ்
சாருமம் மாச்சரியந் தானும்பின் — னேரிடு
மாசையுங் கோபமு மச்சமுஞ் சோகமு
நீசருவ மெல்லமெல்ல நீக்குவாய் — வாசனையால் 78

தொந்த மனைத்துந் தொடரா தகற்றியே
சந்ததமுந் தான்சனத்தைச் சாராதா — னிந்த
வுடம்புடனே யெல்லா முணர்ந்திடுவா னாகித்
திடம்பெறுதே சார்ந்தொளிர்வன் றேராய் — மடந்தெறுமெய்ஞ் 79

ஞானத்தி னாலேயே நன்முத்தி யவ்வண்ண
மேனைய சித்திபய னின்றேனு — மூனமாம்
போகத்துஞ் சித்தியினும் பூண்டுமயல் வேண்டிடுவர்
சாதகரா யுள்ளவர்க டாமறைபோ — யோதும் 80

அணிமாதி யானகுண மார்ந்திடுக வன்றி
யணுகாம லேயஃ தகல்க — வுணர்ந்தே
விமலமா மப்பதியை வீடுறுத றப்பா
னமலமாந் தேகி யறிதா — னமரிடமாம் 81

ஆகந்தா னைம்பூத வாகார மங்கேயே
யேகசிவன் றானு மினிதமர்வன் — பாகமிலா
தெங்கு முறுசிவமுன் னித்தரையீ றுமுலகஞ்
சங்கரன் றன்னுருவந் தான்மெய்யே — துங்கனும் 82

இவ்வறிஞ னைக்கண் டிசைகரண மூன்றானுஞ்
செவ்வியகந் தங்கனிபூத் தீம்புகையுந் — திவ்வியமா
நீராட லாடையூ ணெஞ்சுருகு மன்பாலீந்
தாராரா தித்திடு வார்பிறவி — சாராமல் 83

அப்படியே வீடுறுவ ராருயிரே யம்முத்தி
மெய்ப்படியு மார்க்க விருப்பமுளா — ரப்புருடற்
பூசைபுரி வாரன்னோன் புண்ணியத்தைப் பாவத்தை
யேசுபவ ரெய்திடுவா ரெண்ணென்றவ் — வீசன் 84

85. இவ்வாறு அவ்வீசன் கூறி, மேலும் கூறலானான். ஞானமும், ஆசாரமும் யாவையென்று உன்னால் கேட்கப்பட்டதோ, அவையாவும் விவரமாக உனக்கு அறிவிக்கப்பட்டது. என்னால் போதிக்கப்பட்ட அந்த மார்க்கங்கள் அனைத்தும், காலோத்தர ஞானமே யாகும். உன் மனதில் இன்னும் ஏதாவது கேட்கத் தகுந்தது உள்ளதெனில், மாதே நீ பகர்வாய்!

உலகம் உய்வதற்காக முக்தன் ரமணேசன் மொழி பெயர்த்து உதவிய இந்த நூல் உத்தம சாதகர்களுக்கு வழி காட்டும் தீபமாகும்.

**அறிவுடஞ சாரமெவை யாசிக்கப் பட்ட**
**தறிவிக்கப் பட்டதெஞ லந்த — நெறியாவுங்**
**காலஞா னந்தான் கருத்தில்வே றேவினவற்**
**பாலதெது மாதே பகரென்றான் — ஞாலமுய்ய** 85

**முத்தன் ரமணன் மொழிபெயர்த் தீந்தவீ**
**துத்தம ருள்ளத் தொளி.**

------

------

*__தேவிகாலோத்தர ஞானாசாரவிசார படலம் - நூல் வரலாறு:__*

*ஸ்ரீ பகவான் மலைமீது விருபாக்ஷ குகையிலிருந்த காலத்தில், அன்பர் ஒருவர் கிரந்தாக்ஷர ஸம்ஸ்க்ருத ஆகம நூலின் ஏட்டுச் சுவடிகளை கொண்டு வந்து ஸ்ரீபகவானிடம் காட்டினார்.*

*அதை புரட்டிப் பார்த்த ஸ்ரீபகவான், கிரியைகளையும் சரியைகளையும் பற்றி விஸ்தாரமாக கூறும் ஆகமங்களுக்குள், அதிலும் உப ஆகமங்களுக்குள், பூரண அத்துவித ஞானத்தை போதிக்கும் "தேவீ காலோத்தர - ஞானாசாரவிசாரபடலம்," - "சர்வ ஞானோத்தர - ஆன்ம சாட்சாத்கார பிரகரணம்" இரண்டையும் பார்த்து ஆச்சரியமாகயிருந்தது. அதில் நிர்விகார பரப்பிரம்மத்தைப் பற்றி மிகத் தெளிவாக கூறப்பட்டிருப்பதைக் கண்டு மேலும் ஆச்சரியமடைந்தார்.*

*இந்த இரண்டு பிரகரணங்களும் ஈசனால் தேவிக்கு உபதேசிக்கப் பட்டதொன்றும், குகனுக்கு உபதேசிக்கப்பட்டதொன்றுமாகும். இவை இரண்டும் தமது அனுபூதியை ஒட்டியேயிருப்பதைக் கண்டு, இவற்றை ஒரு புத்தகத்தில், நாகராக்ஷரத்தில் அழகாக அச்சுப்போல் எழுதிவைத்துக் கொண்டார்.*

*விருபாக்ஷ குகையிலிருக்கும் போதே 85 சுலோகங்கள் கொண்ட, ''தேவீ காலோத்தர - ஞானாசாரவிசார படல'' த்தை, சுலோகத்திற்கொரு வெண்பாவாக தமிழில் மொழி பெயர்த்து அருளினார். அது அக்காலத்திலேயே அன்பர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*